O.S. 116/2019 PW-1

**நாள்**. 05.12.2020

**பெயர்**. கணேசன்

**பி.வா.சா.1 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

இந்த வழக்கில் நான் ஏற்கனவே நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சி சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் இறந்துபோன வாரிசுதாரர்கள் எல்லாம் விடுபடாமல் இந்த வழக்கில் சேர்த்திருக்கிறேன் என்றால் சரிதான். வழக்கில் தாக்கல் செய்யும் போது தான் கேட்ட பரிகாரத்தை தான் கூடுதல் பரிகாரத்தில் கேட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். வழக்கில் இறந்த போன நபர்களுக்கு பதிலாக சேர்க்கப்பட்டுள்ள வாரிசுதாரர்களுக்கு வழக்கின் விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். வழக்கில் வாதி தரப்பில் சேர்க்கப்பட்டுள்ள நபர்கள் நீதிமன்றத்தில் வாதி தரப்பில் சாட்சியம் அளித்துள்ளார்களா என்றால் இல்லை. இந்த கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் நீங்கள் தாவா சொத்தில் வேறு ஏதாவது மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை. இந்த கூடுதல் வாக்கமூலம் போட்டது நீங்கள் உங்கள் வசதிக்காக ஏற்படுத்திக்கொண்டது என்றால் சரியல்ல.